**நாள்:** 18.02.2026

**O.S. No. 47/2020**

**வா.சா.3**

**பெயர்: செல்வி, க/பெ. தியாகராஜன்**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

தாவா சொத்தின் சர்வேஎண், நான்கெல்லை தெரியுமா என்றால் சர்வேஎண் தெரியாது. வடக்கே என் வீடு உள்ளது. தெற்கே காலிமனை உள்ளது. மேற்கே கடைகள் உள்ளது. கிழக்கே விஜயா உள்ளிட்டோர் வீடுகள் உள்ளது. என்னுடைய சொத்துக்கும் வாதிகளுடைய சொத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் அடிமனை யாருக்கு சொந்தம் என்றால் 1ம் வாதியின் கணவரான கோபாலுக்கு சொந்தம். பிரதிவாதிகள் ஜமாத் நிர்வாகம் கோபாலுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஜமாத் நிர்வாகத்தால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கோபாலுக்கு எதிராக தீரப்பு செய்யப்பட்ட காரணத்தால் கோபால் மற்றும் அவரது குடும்பத்தார் தாவா சொத்திலிருந்து அப்போதே வெளியேறிவிட்டனர் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகள் ஜமாத்திற்கு சொந்தமானதா என்றால் இல்லை. தாவா சொத்து சம்மந்தமான விபரம் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் வாதிகள் கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.02.18 18:45:29 +0530